[13th March 1954

provided a wasteful amount of the male element which can be kept properly in a frigidaire and that is what is being done. We cannot draw an analogy from human affairs to the animal world where we have enslaved the animal world for our work.''

MR. SPEAKER :—'' Questions over.''

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—QUESTIONS—PROCEDURE *RE* ONE NON-OFFICIAL MEMBER PUTTING QUESTIONS TO ANOTHER NON-OFFICIAL MEMBER.

MR. SPEAKER :—'' I must tell hon. Members that when Sri M. Palaniyandi put a supplementary question to another hon. Member, the Hon. the Chief Minister said that the question had to be addressed not to him but to the other hon. Member concerned. Such a system of one non-official Member putting a question to another non-official Member is prevalent in some other Legislatures including the House of Commons. If hon. Members want such a system to be adopted here, we can also introduce it. Anyhow, I shall send a note to hon. Members on the subject.''

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1954-55.

(1) DEMAND I—LAND REVENUE DEPARTMENT—*cont.*

11-14 a.m. * SRI P. VENKATESHA SHOLAGAR :—'' கனம் சபாநாயகர் அவர்களே, தோழர் ராமலிங்கம் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகின்றேன். இந்தச் சபையில் பட்ஜெட் மீது நடந்த பொது விவாதத்தின்போது பேசிய அங்கத்தினர்களும், தற்போது ரெவினியூ மானியத்தின் மீது நடக்கும் விவாதத்தில் பேசிய அங்கத்தினர்கள் பலரும் நிலச் சீர்திருத்தம் உடனடியாக வேண்டுமென்பதைப்பற்றி மிகமிக அழுத்தமாக வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். சென்ற காலத்திலேயே விவசாயச் சீர்திருத்தம் ஏதாவது வருமென்று எதிர்பார்த்தோம். ஆனால் வரவில்லை. இனிமேலாவது கொண்டுவரவேண்டுமென்று அங்கத்தினர்கள் சொல்வதற்கு சர்க்கார் செவி சாய்க்குமா என்பதும் சந்தேகமாக இருக்கிறது. சர்க்கார் 'சுப்பிரமணியம் கமிட்டி தனது யாதாஸ்தை சமர்ப்பித்தவுடன், அதன் யோசனைப்படி நிலச் சீர்திருத்த சட்டம் ஏதாவது உடனடியாக செய்யும்' என்ற தோரணையில் பல சமயங்களில் பலவிதமான உறுதி மொழிகளையும், ஆறுதல் மொழிகளையும் கொடுத்ததினால் தான் நாங்களும் மக்களுக்கு வெகு சீக்கிரம் நிலச் சீர்திருத்தம் ஏதாவது வருமென்று சொல்லிக்கொண்டிருந்தோம். அவ்வாறே நம்பிக் கொண்டிருந்த விவசாயிகள் எல்லோரும் இன்றைய தினம் ஏமாறவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். 'ஆசைக்காட்டும் முறையில் கொடுக்காதவன் சினை ஆட்டை காட்டுவது' என்று கிராமத்தில் சொல்லுவார்கள். அதைப் போல மக்கள் 'நிலச் சீர்திருத்தம் வேண்டும், நிலச் சீர்திருத்தம் வேண்டும்' என்று கேட்கின்றார்களே என்பதற்காக சர்க்கார், சுப்பிரமணியம் கமிட்டி, ராகவ ராவ் கமிட்டி, குமரப்பா கமிட்டி என்று பல கமிட்டிகளை நியமித்துக்கொண்டிருக்கிறார்களே தவிர உண்மையில் அந்தக் கமிட்டிகளின் யோசனைகளையெல்லாம் அமுலுக்குக் கொண்டுவருவதாக இல்லை. விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையை பூர்த்தி செய்வதற்கு திட்டவட்டமான நடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

'' தஞ்சாவூர் விவசாயப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்து இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகப் போகிறது. அந்தச் சட்டத்தில் பல ஊழல்கள் இருக்கின்றன. அந்த சட்டத்தைக்கொண்டே விவசாயிகளை பெரிய மிராசுதார்கள் பழி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தச் சட்டத்தை